## கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு!

சென்னை, ஆக. 13–

கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற் றும் வடக்கு மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் குறித்து சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு வருமாறு:–

வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம், வருகிற 16.8.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கில்”, கழக இளைஞர் அணி செயலாளர் சட்ட மன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றிட, சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில், நடைபெறும் இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், இரா.விடுதலை, பி.வில்சன்,எம்.பி., வழக்கறிஞர் ஆர்.கிரிராஜன், எம்.பி., ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திரு ப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக் குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு கிருஷ்ணகிரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, புதுச்சேரி –காரைக்கால் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உயர்நீதி மன்ற மற்றும் மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர்கள் – கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ அறவித்துள்ளார்.

## அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

# கல்வி உதவித் தொகை தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடை!

## முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட – முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!

சென்னை, ஆக.13-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடைபட்டுள்ளது. மாணவர்களின் எதிர்கால நலனை கருதி முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதாவது:

இங்கிலாந்து நாட்டில் உள்ள Manchester School of Architecture கல்வி நிறுவனத்தில் M.Arch படிக்க தேர்வான சென்னையைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு தமிழ்நாடு அரசின் “அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத் தின்” கீழ் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை நேரடியாக ஏற்க மறுத்துள்ள அந்த கல்வி நிறுவனம், இந்திய ஒன்றிய அரசின் மூலம் வழங்கப் பட் டால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடங்கி ஒரு மாதகாலம் ஆகும் நிலையிலும் உரிய தீர்வு எட்டப்படாமல் இருப்பதாக கிடைக்கும் தகவல்கள் கவலையைத் தருகின்றன. அதேபோல University of Leeds உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி சேரவிருந்த சில மாணவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை சென்று சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் காலக்கெடு முடிந்து, சேர்க்கை தடைபட்டு இருப்பதாகவும் தெரியவருகிறது.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இந்தப் பிரச்சினைகளை விரைவாக களைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ‘கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்’ என்ற நீதிமன்ற தீர்ப்பின்படி

# நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளை கட்டிட அரசு முன்வர வேண்டும்!

## இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஆக.13-

‘கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்’ என்ற உயர்நீதிமன்ற உத்தரவினை ஏற்று, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளை ஏற்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



தி.மு.க.வுக்கு எதி¯ரான மனுவை தள்¯ளு¯படி செய்து கோவில் நிதியை கல்¯விக்குப் பயன்படுத்த¯லாம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அளித்துள்ள பேட்டி வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் 10 கல்லூரிகள் திருக்கோயில்கள் சார்பில் கட்டப்படும் என்று திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலோடு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பில் நான்கு கலைக் கல்லூரிகள் அந்த ஆண்டு டிசம்பர் மாதமே துவக்கப்பட்டது.

அந்த அரசாணையை எதிர்த்து அன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி அவர்களிடம் இந்த அரசாணைக்கு தடை கேட்டு உயர் நீதிமன்றம் சென்ற நிலையில் அவர்கள் தடையாணைக்கு முன்பாகவே சென்னை கொளத்தூரிலேயும், திருச்செந்தூர் திருக்கோயில் சார்பிலேயும், அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் சார்பிலேயும், பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பிலேயும் நான்கு கல்லூரிகளும் வாடகை கட்டிடத்தில் துவங்கப்பட்டது.

நீதிமன்றத்தில் முறையாக அன்றைய தினம் அரசினுடைய தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் அவர்களின், அவர்கள் வாதத்தை அடுத்து நான்கு கல்லூரிகளுக்கும் தடை இல்லை இனி மேற்கொண்டு கல்லூரிகள் கட்டவேண்டுமென்றால், அறிவித்த அறிவிப்பிலே இருக்கின்ற ஆறு கல்லூரிகள் கட்டுவதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை பெற்று கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீடு மனுவாக உச்ச நீதிமன்ற த்திற்கு சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலேயும் கல்லூரிகள் கட்டப்படுவது அறநிலையத்துறையின் கொடைகளின் சட்டத்தின்படி ஏற்புடையது என்று அங்கேயும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் அவர்கள் மீண்டும் இந்த கல்லூரிகள் கட்டுவதற்கு உண்டான வழிகாட்டி நெறிமுறைகள் ஒழுங்காக கடைபிடிக்கவில்லை என்று ஒரு வழக்கை பதிவு செய்திருந்தார்கள். அது நேற்றைக்கு உயர் நீதிமன்றத்திலே அந்த வழக்கு வந்தது .அந்த வழக்கின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு மாண்பமை பொருந்திய நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அந்த பெஞ்சிலே கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் தான், முறையானது தான், அறநிலைத்துறை என்பது அறக்கொடைகளின் சட்டப்படி அந்த கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் என்ற தீர்ப்பை வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் அவருடைய திட்டத்தை நேற்றைக்கு உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மகிழ்ச்சியை தான் இன்றைக்கு உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளோம்.

### 50 ஆண்டுகள் செய்ய வேண்டியதை 5 ஆண்டில் செய்த திராவிட மாடல் அரசு!

மேலும் அவருடைய தீர்ப்பிலே இந்த நான்கு கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் கட்டப்பட்டு விட்டன. கபாலீஸ்வரர் திருக்கோயில் கொளத்தூர் கல்லூரியும் அதேபோல் பழனி ஆண்டவர் திருக்கோயிலுடைய பழனி ஆண்டவர் கல்லூரியும் கட்டப்பட்டு விட்டது.மீதம் இருக்கின்ற கல்லூரிகள் கட்டப்பட வேண்டும் அது திருக்கோயிலின் நிதி இருந்தால் ,திருக்கோயில் நிதியிலிருந்து கட்டலாம் அப்படி இல்லை என்றால் அரசு அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்து இருக்கின்றார்கள் .அந்த தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த இரண்டு கல்லூரிகளும் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு சொந்த கட்டிடத்தை கட்ட இந்த அரசு நீதிமன்ற தீர்ப்பின்படி முன்வர வேண்டும். அதோடு ஏற்கனவே நிலுவையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஆறு கல்லூரிகள் கடையம், கலசப்பாக்கம், அணைக்கட்டு திருக் காட்டுப்பள்ளி, அதேபோல் லால்குடி, சென்னை கீழ்பாக்கம் அந்த ஆறு கல்லூரிகளையும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முனைப்பு காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையை பொறுத்தவரையில் 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய அரசு திராவிட மாடல் அரசு. ஆன்றோர்கள், சான்றோர்கள், பாராட்டுகின்ற அரசு, ஆத்திகர்கள் நாத்திகர்கள் என அனைவருக்கும் உண்டான அரசு என்பதை கடந்த காலம் நிரூபித்தது போல் இந்தாண்டும் கடந்த காலத்தினுடைய திட்டங்களை அவர்களுடைய வழிகாட்டுதலாக எடுத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது கோரிக்கையை வைக்கிறேன்.

**செய்தியாளர்:** சார் இப்ப இருக்கின்ற இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பல்வேறு குற்றச்சாட்டு களையும் விமர்சனங்களையும் முன்வைத்துக் கொண்டிருக்கின்றார் அதைப்பற்றி

**பி.கே.சேகர்பாபு:** நான் முன்னரே ஏற்கனவே சொன்னது போல் சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும், இல்லாததையும் பொல்லாததையும் வாய்க்கு வந்தபடி பேசுவது நாகரிகம் அல்ல தக்கச் சான்றோடு அவர் எடுத்துக் கூறினால் பதில் சொல்ல தயாராக இருக்கிறோம் என்று பேட்டி அளித்தார்.

